செ.வெ.எண்:27 நாள்:25.8.2021

# பத்திரிக்கை செய்தி

மயிலாடுதுறை மாவட்டத்தில் எதிர்வரும் 31.8.2021க்குள் நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிக்குட்பட்ட அனைத்து வர்த்தக நிறுவன உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் கண்டிப்பாக கொரோனா தடுப்பூசி போட்டிருக்க வேண்டும். நகராட்சி மற்றும் பேரூராட்சி அலுவலர்கள் ஆய்விற்கு வரும்போது, வர்த்தக நிறுவன உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டதற்கான உரிய ஆவணத்தை காண்பிக்க வேண்டும். கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ளாமல் வர்த்தக நிறுவனங்களில் ஊழியர்கள் பணிபுரிவது தெரியவந்தால் சம்பந்தப்பட்ட வர்த்தக நிறுவனத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.